திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

 மூ.மு. எண். 8695/அ1/2025 நாள். 22.08.2025

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி – அமைச்சுப்பணி – திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்போது மாறுதல் மூலம் நாமக்கல் மாவட்டம், மாவட்டக்கல்வி அலுவலகத்தில் (தொடக்கக்கல்வி) இளநிலை உதவியாளராகப் பணியாற்றி வரும் திருமதி. கு. ஜீவிதா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் சார்பு

பார்வை: 1. அரசு ஆணை எண் 151 பள்ளிக் கல்வி(வரவு-செலவு)த் துறை நாள். 09.09.2022

2.திருப்பூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.10611/அ1/2023 நாள். 27.09.2023

3.நாமக்கல், மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) கடித ந.க.எண். 3959/அ1/2025 நாள்.28.07.2025

**************************

பார்வை 2- இல் காண் ஆணையின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிநாடுநர்களில் திருப்பூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தாராபுரம் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டு 29.09.2023 முற்பகல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியாற்றி தற்போது மாறுதல் மூலம் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் மாவட்டக்கல்வி அலுவலகத்தில் (தொடக்கக்கல்வி) இளநிலை உதவியாளராகப் பணியாற்றி வரும் திருமதி. கு. ஜீவிதா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்திட கோரும் கருத்துரு பார்வை- 3 இல் காண் கடிதத்தின்படி பெறப்பட்டது.

பார்வை 3 இல் காண் நாமக்கல் மாவட்டக்கல்வி (தொடக்கக்கல்வி) அலுவலரின் பரிந்துரை அடிப்படையிலும் பார்வை 1- இல் காண் அரசு ஆணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த 29.09.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மேற்காண் பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு தொடர்ந்து பணியாற்றி அன்னாரது தகுதிகாண் பருவ காலத்தினை மன நிறைவு அளிக்கும் வகையில் பூர்த்தி செய்ய வேண்டும்.

2. மேற்கால் பணியாளர் அன்னாரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை முடித்து அதற்குரிய அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும்.

3. மேற்கால் பணியாளர் அன்னாரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் அரசு பணியாளர்களுக்கு நடத்தப்படும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும்.

மேற்கண்ட விபரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரது பணிப்பதிவேட்டில் உரிய முறையில் பதிவுகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலருக்கு அறிவிக்கப்படுகின்றது. மேலும் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை உடன் அனுப்பிடவும் சம்பந்தப்பட்ட தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:
அசல் பணிப்பதிவேடு 1 தொகுதி

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
திருப்பூர்

22.08.25

பெறுநர்
சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக).

நகல்:

1. மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) நாமக்கல்.
2. கோப்புக்கு.

மாவட்டக் கல்வி அலுவலகம் [தொடக்கக்கல்வி] நாமக்கல்
மே.ப-ஒ.மு. எண் 3959/அ1/2025 நாள் .08.2025
அசல் ஆணை சார்பு செய்யப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்
(தொடக்கக்கல்வி)
நாமக்கல் - 637001.

பெறுநர்
திருமதி. இ. ஜீவிதா, இளநிலை உதவியாளர்
மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக்கல்வி)
நாமக்கல்.